# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SPECIAL COURT TO DEAL WITH THE CASES OF OFFENCES IN CONTRAVENTION OF THE PROVISIONS OF THE MINES AND MINERALS (D&R) ACT, 1957, MADURAI**

**************

| | | |
|---|---|---|
| Case No | : | Spl.S.C.No.14/2021 |
| Deposition of witness | : | LW 10/ PW 7 |
| Name | : | திரு.அமராவதி |
| Father's Name | : | சுப்பிரமணி |
| Village | : | இ.மலம்பட்டி |
| Taluk | : | மேலூர் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 65/26 |
| **Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026** | | |

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி தொடங்கிய நேரம் : 11.10 AM

**முதல் விசாரணை :**

நான் இ.மலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு முன்பு சாட்சி சொன்ன குமரேசன், ராஜன் ஆகியோர் எனது மகன்கள். எங்கள் ஊரில் குவாரிகள் இருக்கிறது. குவாரி அருகில் கண்மாய் இருக்கிறது. அந்த குவாரிகள் யார் யார் பெயரில் இருக்கிறது என்று தெரியாது. எங்கள் ஊரில் குப்பையன் குளம் கண்மாய் என்று இருந்தது. அங்கு ஆடு மாடு மேய்ப்பதற்காக அந்த கண்மாய் பக்கம் போவோம். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

SANKARANARAYANAN ROHINI

Digitally signed by SANKARANARAYANAN ROHINI
Date: 2026.03.10 16:43:07 +0530

அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி அளிக்கப்படுகிறது: **00**

2011ம் வருடம் மே மாதம் முதல் வாரத்தில் நானும், சுப்பிரமணி மனைவி நாகுவும் குப்பையன்குளம் கண்மாய் பக்கம் சென்றோம் என்றும், அங்கு பி.ஆர்.பழனிச்சாமியும், அவரது மகன்கள், மகள், மனைவி ஆகியோர் ஒன்றாக காரில் வந்தார்கள் என்றும், அங்கிருந்த மேனேஜர்கள் மற்றும் ஊழியர்கள் கிரானைட் குவாரியில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட கற்களை கிரேன் மூலம் கண்மாய் கரையில் வைத்தார்கள் என்றும், அதனால் கண்மாய் சேதமடைந்தது என்றும், ஆடு மாடுகள் தண்ணீர்குடிக்க வழியில்லாமல் போனது என்றும், விவசாயம் செய்ய வழியில்லாமல் போனது என்றும் இதனை கேட்ட எங்களை மிரட்டினார்கள் என்றும், அதனால் கண்மாய் கரை சேதமடைந்தது என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி முடிவடைந்த நேரம் : 11.20 AM

(ஒம்./-)******

சாட்சியால் திறந்த மன்றத்தில் சாட்சியமளிக்கப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SANKARANARAYANAN ROHINI

Digitally signed by SANKARANARAYANAN ROHINI
Date: 2026.03.10 16:43:17 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான
குற்ற வழக்குகள் தனி சிறப்பு நீதிமன்றம்,
மதுரை.